
திருக்கேதீச்சரப் பதிகங்கள்

உ
சிவமயம்



# திருக்கேதீச்சரப் பதிகங்கள்

**31.03.2014 விஜய வருடம்**

இறை சிரோரத்தினம், மனிதநேய மாமணி **திரு. வி. கயிலாசபிள்ளை** அவர்களின்

**அகவை எண்பது பூர்த்தி நன்நாள் அன்று வெளியிடப்படுகின்றது.**


**இலவச வெளியீடு**

**திரு. கயிலாசபிள்ளை அரவிந்தன்**

# பொருளடக்கம்


01. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த
**திருக்கேதீச்சரப் பதிகம்** 01

02. சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த
**திருக்கேதீச்சரப் பதிகம்** 05

03. திருக்கேதீச்சரத்தைச் சுட்டிய
**தேவார புராணங்கள்** 09

04. புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களின்
**திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல் பாட்டு** 13

# திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த
# திருக்கேதீச்சரப் பதிகம்

பண் - நட்டராகம்
திருச்சிற்றம்பலம்

விருது குன்றமா மேருவில் நாணர வாவனல் எரியம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளுங்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டங்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே. 01

பாடல் வீணையர் பலபல சரிதையர் எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது இருங்கடற் கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரங் கைதொழக் கெடுமிடர் வினைதானே. 02

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர் அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவர் அகந்தொறும் இடுபிச்சைக்
குண்ண லாவதோர் இச்சையி னுழல்பவர் உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க் கருவினை யடையாவே. 03

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே. 04

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடல் மாதோட்டத்
தெல்லை யில்புகழ் எந்தைகே தீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தரனடி யிணைதொழும் அன்பராம் அடியாரே. 05

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே தீச்சரம் பிரியாரே. 06

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை நடமிடு மாதோட்டந்
தொண்டர் நாடொறுந் துதிசெய அருள்செய்கே தீச்சர மதுதானே. 07

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடும் அடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. 08

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் அடியிணை காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியும் நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத் திருந்தஎம் பெருமானே. 09

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சரம் அடைமின்னே. 10

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை அண்ணல்கே தீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்காள் பரகதி பெறலாமே. 11

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருக்கேதீச்சரப் பதிகம்

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

நத்தார்புடை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே. 01

சுடுவார்பொடி நீறுந்நல்ல துண்டப்பிறைக் கீளுங்
கடமார்களி யானைஉரி அணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே. 02

அங்கம்மொழி அன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேற்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே. 03

கரியகறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருட்
பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேற்
றெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே. 04

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேற்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. 05

வெய்யவினை யாயயடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரிற்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேற்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 06

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரிற்
பானத்துறும் மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 07

அட்டன்னழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரிற்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேற்
சிட்டன்நமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே. 08

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே. 09

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருட்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே. 10

திருச்சிற்றம்பலம்

# திருக்கேதீச்சரத்தைச் சூட்டிய தேவார புராணங்கள்

## சுந்தரர் தேவாரம்
## பண் - திருநாட்டுத் தொகை

திருச்சிற்றம்பலம்

ஈழநாட்டு மாதோட்டந் தென்னாட்டி ராமேச்சரஞ்
சோழநாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழியூரன் நாட்டுக் கெல்லா மணியாகிய
கீழையில் லரனார்க் கிடங்கிள்ளி குடியதே.

திருச்சிற்றம்பலம்

# திருநாவுக்கரசர் தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பூதியணி பொன்னிறத்தர் பூண் நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சர மேவினார் கேதாரத் தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக் கொண்டார்
மழபாடிமேய மழுவாளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

திருச்சிற்றம்பலம்

# சேக்கிழார் பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

அந்நகரில் அமர்ந்தங் கண்இனிது மேவி
　　ஆழியுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
　　மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட் டத்தில்
　　திருக்கேதீச்சரத் தண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும்
　　உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்.

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்னமலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்.

ஞாலம் உய்ய நாம் உய்ய,
நம்பி சைவநன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத்
தொகை முன் பாடச் செழுமறைகள்
ஓலமிடவும் உணர்வரியார்
அடியாருடனும் உளதென்றால்
ஆலம் அமுது செய்தபிரான்
அடியார் பெருமை அறிந்தாரார்.

மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.

திருச்சிற்றம்பலம்

# புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களின்

# திருக்கேதீச்சரநாதன் ஊஞ்சல் பாட்டு

## காப்பு

உலகமெலாந் தனதுருவா யொளிர்வி ராட்டின்
ஓங்குமிடை நாடியா மிலங்கை தன்னில்
நிலவுதிருக் கோணமலை கிழக்கின் கண்ணே
நிகரில்கதிர் காமந்தென் திசையின் கண்ணே
மலருநகு லேசாதி வடக்கின் கண்ணே
மருவமேற் றிசைக்கேதீச் சரத்தான் மீது
இலகுதமிழ் ஊஞ்சலிசை யடியேன் பாட
இனிதருளும் கணபதிதான் காப்ப தாமே

## பதிகம்

திருவோங்கு நால்வேதம் தம்ப மாக
சிறந்த சிவாகமாங் கள்மேல் விட்ட மாக
மருவோங்கு மாறங்கம் தாம்ப தாக
வளர்கலைகள் ரத்னமணிப் பலகை யாக
தருமாதி நான்குமுயர் சிங்க மாகத்
தாங்கவொளிர் பிரணவவொண் பீட மீதில்
கருணைமிகு திருக்கேதீச் சரநா தா! நற்
கௌரியுமை யுடனிருந்தே ஆட ரூஞ்சல்

ஈசானம் நவரத்தினக் கிரீடம் மின்ன
எழில்நீறு திலகம்தற் புருடம் மன்ன
தேசான அகோரமதில் மதாணி கண்டி
திகழ்வாம தேவமதில்யோக பட்டம்

மாசான தகற்றிடுசத் யோசா தத்தில்

மறைச்சிலம்பு கிடந்தொலிப்ப வாம பாகம்

பூசாது சாரியுமை கௌரி மன்னப்

பொலிகேதீச்சர நாத! ஆடீ ரூஞ்சல்

சந்திரனும் சூரியனும் குடைகள் தாங்கச்

சாமரையை வாயுவெடுத் திரட்டி நிற்ப

இந்திரன்தான் ஆலவட்டம் எடுத்தே ஏந்த

இருபாலும் விசிறிகொடு வருணன் வீச

கொந்தலர்பூந் தட்டேந்திக் குபேரன் போற்றக்

குதுகலமாய் அக்கினிகண் ணாடி காட்ட

வந்தனைசெய் பூதங்கள் நடனம் செய்ய

மாதுகௌரி மணவாளா! ஆடீ ரூஞ்சல்

அணியாக அமரர்குலம் தொழுது வாழ்த்த
அன்பர்கள்நாம் பண்களிசை யமையப் போற்ற
கணிநாத வேதம்மறை யவர்க ளோத
கந்தருவர் தும்புருநா ரதர்கள் பாட
பணியாக ஆகமங்கள் ஆய்ந்து தேர்ந்து
பக்தியுடன் ஆதிசைவர் பூசை செய்ய
மணியாரு முறுவலுமை கௌரி தானும்
மகிழ்கேதீச சரநாதா! ஆட ரூஞ்சல்.

சங்கினொடு வங்கமலி சமுத்ர தீர்த்தம்
சார்ந்தவர்தம் பவம்தீர்பா லாவித் தீர்த்தம்
அங்கைகவர் கனியுண்ண மந்தி தாவும்
அயலில்மயில் நடனஞ்செய்பொழில் மாதோட்டத்தில்

எங்குமறை யொலியோங்க இசையுந் தோங்க
எழிலாரு மரம்பையர்கை வடந்தொட் டாட்ட
மங்கையுமை கௌரியிடப் பாகம் மேவ
வளர்கேதீச் சரநாதா! ஆட ளூஞ்சல்

கேதுதிருத் தலம்வந்து பூசித் தேத்திக்
கேட்டவரம் பெற்றமையாற் கிளந்த நாமம்
ஏதுவினாற் றிருக்கேதீச் சரமென்றாக
இறையருளாற் போற்றிவரு மாதோட்டத்தில்
ஓதுபல நலங்க ளெல்லாம் உயர்தல் கண்டு
உவந்தடியார் திருப்பணியில் ஊக்கம் கொள்ள
மாதுமையாம் கௌரியிடப் பாகம் மன்ன
வளர்கேதீச் சரநாதா! ஆட ளூஞ்சல்

சூதமொரு கதலிகமு காரும் சோலை
சூழுமளி நறைதேரு மாதோட்ட டத்தில்
மாதவமார் மேருமுடி யிருப்பக் கண்ட
மாகாதுவட்டா தளியமித்து நகர மாக்கி
தாதுநிறை மலர்ச்சடையா யுனைப்பூசித்துத்
தன்பெயரால் நகர்விளங்க வரங்க ளீந்து
மாதுமையாள் கெளரியிடப் பாகம் மேவ
மகிழ்கே தீச்சர நாதா! ஆடீ ரூஞ்சல்

ஆய்ந்தமலர் மாலைதொடுத் தணியார் ஓர்பால்
அன்பினொடு மைந்தெழுத்தும் செப்பிப்பார் ஓர்பால்
தோய்ந்துதிரு மஞ்சனநீர் சுமப்பார் ஓர்பால்
தூயதிரு வலகுமெழுக் கமைப்பார் ஓர்பால்

ஏய்ந்தவிளக் கிடுவார்சங் கிசைப்பார் ஓர்பால்
இன்னிசைமங் கலநாதம் இசைப்பார் ஓர்பால்
வாய்ந்தஉமை கௌரியருள் வழங்க ஓர்பால்
வளர்கேதீச் சரநாதா! ஆடீ ரூஞ்சல்

ஐங்கரனார் தந்தையரோ! ஆடீ ரூஞ்சல்
ஆறுமுகனைத் தந்தவரே! ஆடீ ரூஞ்சல்
அங்கனக வில்லியரே! ஆடீ ரூஞ்சல்
அரிபிரமர்க் கரியவரே! ஆடீ ரூஞ்சல்
கங்கையணி செஞ்சடையீர்! ஆடீ ரூஞ்சல்
காலனையு தைத்தவரே! ஆடீ ரூஞ்சல்
செங்கனிவாய்க் கௌரிபங்கா! ஆடீ ரூஞ்சல்
திருக்கேதீச் சரநாதா! ஆடீ ரூஞ்சல்

அந்தணர்கள் வாழிசுரர் ஆண்கள் வாழி
அருமறைகள் வாழிசிவா கமங்கள் வாழி
செந்தமிழார் திருமறைகள் சைவம் வாழி
செங்கோலாய் அரசநெறி சிறந்து வாழி
சுந்தரமார் நீறுகண்டி துலங்கி வாழி
தூயவடி யார்களும்ஐந் தெழுத்தும் வாழி
வந்துபொழி மறைவாழி கௌரி யம்மை
மன்திருக்கேதீச்சரன்தாள் வாழி வாழி

## குறிப்பு : 2ம் பாட்டு

| | | | |
|---|---|---|---|
| ஈசானம் | : திருமுடி | தற்புருஷம் | : திருமுகம் |
| அகோரம் | : இருதயம் | வாமதேவம் | : உந்தி |
| சத்யோசாதம் | : திருவடி | | |

## லாலி

இராகம் : உசேனி

லாலிலா லீஜெக தீச லாலி - இந்த
ஞாலமுழு துய்யவருள் தேச லாலி
ஈசதிருக் கேதீச்சர நாத லாலி - நாளும்
இன்பருளும் கௌரியுமை பாகலாலி

காமனைமுன் காய்ந்ததிருக் கண்ண லாலி வெய்ய
காலனையு தைத்ததிருக் கால லாலி
வாமமுறை கௌரிமணவாள லாலி நல்ல
வாழ்வுதரும் கேதீச்சர நாத லாலி

## எச்சரிக்கை

இராகம் : சங்கராபரணம்

அந்தணர்கள் வேதமோத ஆதிசைவர் பூசைசெய்ய
துந்துபியைந் தும்முழங்கத் தொழுவீர் எச்சரிக்கை
வந்திமையோர் போற்றிசைப்ப மங்கைகௌரி கேதீச்சரத்
தெந்தைகொலு சைபவங்காண் யாரும் எச்சரிக்கை
வள்ளல்திருக் கேதீச்சர நாதன்கௌரி யம்மையருள்
மன்னுதிரு மணங்கண்டு வாழ்வீர் எச்சரிக்கை
உள்ளமகிழ் பூத்துயிர்கள் ஓங்குபர மானந்தம்
கொள்ளுமண மென்பதுளம் கொள்வீர் எச்சரிக்கை

# பராக்கு

இராகம்: பிலஹரி

அகில வுலகமுதல் ஆரண காரண னாயபரம் பொருளாம்
ஐயனை யமரர்கள் வையக முறைபவர் அடிதொழுவீர் பராக்கு
மகிழும லர்ப்பொழில் சூழ் மாதோட்டத்தில் வாழுமை கௌரிதனை
வள்ளல்கே தீச்சர நாதனை வழிபடும் மாதவரே பராக்கு

மங்கல சங்காலி பொங்கும்பல் லியவொலி எங்குமெ முந்தொலிப்ப
வருபவர் புப்ஷீதரு பணிபல முறைசெயும் வண்மையரே பராக்கு
பங்கய னரியறி யாதபதத்தொழும் பான்மை யெமக்கருளும்
பண்மொழி கௌரிகே தீச்சர நாதனைப் பாடுவீர் பராக்கு.

## மங்களம்

இராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

### பல்லவி

மங்களம் ஜெய மங்களம் - ஜெய ஜெய மங்

### அனுபல்லவி

ஐங்கரனாம் முன்னவற்கும் ஆறுமுக நம்பியற்கும்
அம்மைதெய்வ யானைவள்ளி அணிமயில்வேல் சேவலுக்கும் - மங்

### சரணம்

தெய்வநட ராசருக்கும் சிவகாமித் தேவியர்க்கும்
சேர்ந்தமணி வாசகற்கும் திருத்தொண்டு செய்பவர்க்கும்
நவ்விவிழிக் கௌரிதிருக் கேதீச்சர நாதருக்கும்
நற்றிருப்ப ணிச்சபைக்கும் நயந்து போற்றி செய்பவர்க்கும் - மங்

திருச்சிற்றம்பலம்



DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., TEL : 011 - 2330195